**STC.No.1197/2022** **நாள் 22.08.2024**

**P.W.1 நாரயணமூர்த்தி, த/பெ.ராமசாமி**

**<u>சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :</u>**

1) நான் 7 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் படிக்க தான் தெரியும். எழுத சுமாராக தெரியும். பாலமுருகன் டெக்ஸ் என்ற நிறுவனம் 1/34, மண்ணாங்காடு என்ற முகவரியில் இயங்கி வந்தது என்றால் சரிதான். மேற்படி முகவரியில் தான் நான் தற்போது குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எத்தனை வருடமாக அந்த முகவரியில் குடியிருந்து வருகிறேன் என்றால் நான் பிறந்ததிலிருந்து (1977 ஆம் ஆண்டு) அங்கு தான் குடியிருந்து வருகிறேன். அந்த முகவரியில் தறி போட்டது எந்த வருடம் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. 1998, 1999 ஆக இருக்கலாம்.

2) எதிரி வடிவேல் எனது அக்காவின் கணவர் என்றால் சரிதான். 1993 ஆம் ஆண்டில் எனது அக்காவிற்கும், எதிரிக்கும் திருமணம் நடந்தது என்றால் சரிதான். அந்த திருமணத்திற்கு எதிரியின் வீட்டில் சமதம் இல்லாததால் எங்கள் வீட்டில் எனது அக்காவும், அவரது கணவர் வடிவேலும் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். சுமார் எத்தனை வருடமாக அங்கு குடியிருந்தார்கள் என்றால் 2010 ஆம் ஆண்டு வரை குடியிருந்தார்கள். எதிரி வடிவேல் எங்கள் வீட்டில் குடியிருந்தபோது விவசாயத்திலிருந்து வருமானம் வந்தது என்றால் சரிதான். நான் தறி வேலைக்கு சென்று கொண்டிருந்தேன்.

3) தற்போது என்னிடம் காட்டப்படும் அடமான பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். எதற்காக அந்த அடமான பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்தது என்றால் எனது அப்பா தறி போடுவதற்காக நான், எனது மனைவி, அக்கா ஆகியோர்கள் சேர்ந்து எழுதிக்கொடுத்தோம். எனது அப்பா தான் அடமானம் வைத்தார். ஆனால் நாங்கள் அனைவரும் அதில் கையொப்பம் செய்தோம். சொத்து எனது அப்பா பெயரில் இருந்ததால் அவர் அடமானம் வைத்தார். 1998 ல் நாங்கள் தறி போட்டு இருந்தோம். நாங்கள் கூட்டு தொழில் செய்து வந்தோம் என்றால் சரிதான். அதில் எனது பங்களிப்பு மற்றும் உழைப்பு அதிகம் ஆகும்.

4) மேற்படி கூட்டு தொழில் தான் பாலமுருகன் டெக்ஸ் என்று மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் பங்கு எதுவும் எனக்கு இல்லை. இடம் மட்டும் எங்களுக்கு சொந்தமானது. பொருள் எனக்கு சொந்தமானது இல்லை. உழைப்பு மட்டும் என்னுடையது ஆகும். பாலமுருகன் டெக்ஸ் நிறுவனமாக மாற்றுவதறக்காச சிட்டி யூனியன் வங்கியில் எவ்வளவு கடன் வாங்கினோம் என்றால் எனக்கும் அதற்கு சம்மந்தம் இல்லை. கடன் வாங்கியது எனக்கு தெரியாது. பாலமுருகன் டெக்ஸ்க்கு எனது அப்பா அடமானம் வைத்து கடன் வாங்கியது தெரியுமா என்றால் கடன் செலுத்தாமல் வங்கியிலிருந்து பிரச்சனை வந்தபோது தான் எனக்கு தெரியும்.

5) பாலமுருகன் டெக்ஸ் நிறுவனத்திற்கு உள்ள இரண்டு குடோன்கள் எப்போது கட்டப்பட்டது என்றால் ஒரு குடோன் பழைய மாட்டு சாலையை மாற்றினோம். இரண்டாவது குடோனை 2008 ஆம் ஆண்டில் கட்டினோம். அதற்கு பணியாளர் தங்கும் விடுதியை எப்போது கட்டினோம் என்றால் 2009 ஆம் ஆண்டில் எனது அப்பா கட்டினார். லோன் வாங்கி பணியாளர் தங்கும் விடுதி கட்டியது, குடோன் கட்டியது ஆகியவற்றில் எனது அப்பாவிற்கு நிறைய செலவு ஏற்பட்டது என்றால் அந்த விபரத்தை எனது அப்பா என்னிடம் தெரிவிக்கவில்லை. எத்தனை நபர்கள் வேலை பார்த்து வந்தார்கள் என்றால் 5, 6 நபர்கள் வேலை பார்த்து வந்தார்கள்.

6) நான் வேலை பார்த்தற்கு சம்பளம் கொடுத்தார்களா என்றால் இல்லை. உண்மையில் எனக்கு சம்பளம் கொடுப்பட்டது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக கொடுக்கவில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு என்ன வேலை என்றால் தறி மிசினை ரிப்பேர் செய்யும் பிட்டர் வேலை பார்த்து வந்தேன். எனக்கு அது தவிர வேறு எந்த வேலையும் இல்லை. பணியாளர் தங்கும் விடுதி, குடோன், அலுவலகம் அனைத்தும் ஒரே இடத்தில் ஒரே காம்பவுண்டிற்குள் உள்ளது என்றால் சரிதான். பால முருகன் டெக்ஸ் நிறுவனத்தில் யார் யார் எனது குடும்பத்தை சேர்ந்த நபர்கள் வேலை பார்த்தார்கள் என்றால் எனது அக்கா தார் சுற்றுவார். எதிரி வடிவேல் எந்த வேலையும் செய்யமாட்டார். எதிரி வடிவேல் மேற்பார்வை செய்வார். எதிரி வடிவேல் இரண்டு வேன் வண்டி வைத்திருந்தார். அந்த வண்டிகள் ஈரோடு ரெகுலர் சர்வீஸ் செய்துகொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அதனால் தான் எதிரி வடிவேல் பாலமுருகன் டெக்ஸ் நிறுவனத்தில் வேலை

செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. நான் எனக்கு கொடுக்கப்பட்ட வேலையான தோட்ட வேலையும், தறி வேலையும் செய்து கொண்டிருந்தேன்.

7) 20 தறியின் மொத்த மதிப்பு எவ்வளவு என்றால் ரூ.7 இலட்சம் ஆகும். 2012 ஆம் ஆண்டில் வங்கியிலிருந்து பணத்தை கட்ட சொல்லி எனது அப்பாவிற்கும், எனது அக்காவிற்கும் அறிவிப்பு வந்ததா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கடனில் நான் எப்போது தலையிட்டேன் என்றால் 2014 ஆம் வருடம் இறுதியில் எனது அப்பா அந்த சொத்தை எனக்கு எழுதி தருவதாக சொன்னார், அப்போதிலிருந்து நான் அதை நிர்வகித்து வந்தேன். பிரதிஸ்கா டெக்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் எனது மனைவி என்றால் சரிதான். பாலமுருகன் டெக்ஸ் நிறுவனத்திற்கு எனது மனைவியின் நிறுவனத்திலிருந்து கடன் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எவ்வளவு கடன் தொகை என்றால் ரூ.17 இலட்ச தொகையை ஆன்லைன் பரிவர்த்தனை மூலமாக மாற்றினேன். இந்த வழக்கை நடத்த எனது மனைவி பிரதிஸ்கா டெக்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் என்ற முறையில் அதிகாரம் கொடுத்தாரா என்றால் கொடுத்துள்ளார். அவ்வாறான அதிகார கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

8) எனது அப்பா சொத்தை காப்பற்றுவதற்காக எனது மனைவி வங்கி கடனை செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்தை நான் எழுதிவாங்கிவிட்டேன் என்றால் சரிதான். கடனை கட்டியதால் எனக்கு எழுதிகொடுத்தார்கள் என்றால் சரிதான். எனது அப்பா நிறுவனத்திற்கு, நான் பணம் கட்டியுள்ளேன், நான் அந்த நிறுவனத்தை வாங்கியுள்ளேன், அதனால் எதிரிக்கும் அந்த நிறுவனத்திற்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு எந்த ஆதாரம் இல்லை என்றால் சரிதான். எனது மச்சான் என்று நம்பி பணத்தை கொடுத்தேன். எனக்கு தனிப்பட்ட முறையில் எந்த வருமானம் இல்லை என்றாலும், எதிரிக்கு எந்த காலத்திலும் நான் பணம் கொடுக்கவில்லை என்றாலும், எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் பிற நபரிடம் வாங்கி கொடுத்த தொகையை சொல்வதற்கு எனது தரப்பில் சாட்சி உள்ளார்கள்.

9) வருமான வரி கணக்கு எனக்கு உள்ளது. என்னால் நிர்வாகிக்க முடியாததால் நான் அதை முடித்துவிட்டேன். நான் எதிரிக்கு பணம் கொடுத்ததை வருமான வரி

கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கும், எனக்கும் இடையே எந்த வரவு செலவும் நடக்கவில்லை என்றாலும், எதிரி எனக்கு சட்டப்படியான கொடுக்கவேண்டிய கடன் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. பாலமுருகன் டெக்ஸ் நிறுவனத்தின் வங்கி கணக்கு எந்த வருடத்தில் செயல்படாத நிலைக்கு (NP) வந்தது என்றால் எனக்கு தெரியாது. 2017 ஆம் வருடம் இறுதியில் வங்கிக்கு பணம் செலுத்தவேண்டும் என்று மட்டும் தெரிந்து கொண்டேன். அந்த கணக்கின் நிலை பற்றி எனக்கு தெரியாது. பணம் யாருக்கு கட்டவேண்டும் என்று வங்கியிலிருந்து சொன்னார்கள் என்றால் ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு கட்டவேண்டும் என்று சிட்டி யூனியன் வங்கியிலிருந்து சொன்னார்கள். 2017 ஆம் வருடத்திலேயே எனக்குபால முருகன் டெக்ஸ் நிறுவனத்தின் வங்கி கணக்கு முடக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. உண்மையில் வங்கி முடக்கப்பட்டால் தான் ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு பணம் செலுத்த சொல்வார்கள் என்றாலும், அதனை தெரிந்து கொண்டே நான் பணத்தை செலுத்திவிட்டு தற்போது தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

10) எனது குடும்பத்திற்கும், எதிரியின் குடும்பத்திற்கும் எப்போதிலிருந்து பேச்சு வார்த்தை இல்லை என்றால் காசோலை கொடுத்த கடந்த 2 வருடங்களிலிருந்து பேச்சு வார்த்தை இல்லை. பால முருகன் டெக்ஸ் நிறுவனம் எனது முகவரியில் இயங்கி கொண்டு இருந்த சமயத்தில் எதிரியின் காசோலையை திருடி வைத்துக்கொண்டு தற்போது சட்டவிரோதமாக பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் திருடவில்லை. வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும், எதிரி விடுதலை செய்யதக்கவர் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA Digitally signed by K CHITHRA Date: 2024.08.22 20:50:21 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.